# கொழுந்து
2017



கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
பிரித்தானியா

Kollankaladdy Makkal Ontrium UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
பிரித்தானியா
பெருமையுடன் வழங்கும்

# கலைக்கொழுந்து
# 2017

25- 02- 2017

சனிக்கிழமை

பிரதம விருந்தினர்:
வைத்தியகலாநிதி நவரத்தினம்

Woodbridge High School, St Barnabas Rd,
Woodford, Woodford Green IG8 7DQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய சைவ வித்தியாசாலை
வாழிய இதன் புகழ் நாளும்
தாயெனத் தொழுவோம் தரு பயன் பெறுவோம்
நேயமாய் என்றும் நினைவினில் வைப்போம்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

தொல்புகழ் அமைந்த கொல்லங்கலட்டி
எனும் இடம் உள்ளன வாழி
சைவமாம் அமிழ்தும் தமிழ் மொழி தேனும்
சாரும் விஞ்ஞானமும் வளர்ப்பாய்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

வேலுப்பிள்ளை நூலறி புலவர்
நிறுவிய புகழ் மறவோம்
சிற்றம்பலமாம் சீர்பணி புரிந்தார்
முகாமையாளர் அவர் பெயர் நினைவோம்
விநாயகர் அருளால் விளங்கிடும் தாயை
விருப்புடன் நாள்தோறும் பணிவோம்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

பாடியவர்: புலவர் ம பார்பதிநாதசிவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் - UK
பெருமையுடன் வழங்கும்

# கலைக்கொழுந்து -2017

## நிகழ்வுகள்

மங்கள விளக்கேற்றல்

மௌன அஞ்சலி

பாடசாலைக்கீதம்

புஷ்பாஞ்சலி: செல்வி அபிநயா ராமச்சந்திரன்

நாட்டிய நாடகம்: திருமதி. அனுஷா சஜீவ்
(சக்தி பைன் ஆட்ஸ்) அவர்களின் மாணவர்கள்

தலைவர் உரை: திருமதி கௌரிகுமார்

நடனம்: செல்வி. ஜெயனி ஜெயபாலன் கீர்த்தனம்

## இடைவேளை

பிரதம விருந்தினர் உரை

ராகாஸ் இசைக்குழுவினரின் இசை விருந்து

நன்றியுரை - செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kollankaladdy Makkal Ontrium United Kingdom

## Patrons

**Dr C Pathmanathan    Dr (Mrs) Shanthi Rajasooriyar**
**Mr W Thayalan    Mr Siva Thamboo**
**Mr. S Kamalakgannan**

President



**Mrs. Gowri Ganeshakumar**

Secretary



**Mr. S Ramachandran**

Treasurer



**Mrs. Sugirtha Dilipkumar**

Vice President



**Mr. Kiru Kirupakaran**

Assistant Secretary



**Mr. R Hariharan**

Assistant Treasurer



**Mr. P Sooriyakumar**

Cultural Secretary



**Mr. P Mahendran**

Sports secretary



**Mr. V Sokkan**

**Committee Members**

**Mr. P Vairavanathan**
**Mrs Thembamalar Suriyanarayanan**
**Mr. A Murugathas**
**Mr. A Selvarajah**
**Mrs. Vasantha T Navaratnam**
**Mr. N Ganamurali**

**For Contacts:**

**Gowri: 07872990230    Ram: 07908818366    Sugirtha: 07875998087**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒன்றியத் தலைவரின் செய்தி



கலைக்கொழுந்து 2017 ல் மீண்டும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி.
நாம் அனைவரும் நமது ஊராகிய கொல்லங்கலட்டியைப் பற்றியும் கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் பற்றியும் நன்கு அறிவோம். ஆனாலும் ஒரு சிறிய அறிமுகம் தேவை என நினைக்கின்றேன்.

எமது ஊராகிய கொல்லங்கலட்டி புராதன வரலாறுகளையும், பிரதான வளங்களையும் கொண்ட மாவிட்டபுரம் கீரிமலை, தெல்லிப்பளை, ஆகிய ஊர்களின் நடுவே பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன் மாருதப்புரவீகவல்லியினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பழமையும் சரித்திரப்பிரசித்தியும் கொண்ட கொல்லங்கலட்டி வீரகத்திவிநாயகர் தேவஸ்தானம், மற்றும் சைவசமயத்தையும் தமிழையும் தழைத்தோங்க வைப்பதற்காய் 1869 ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட யாழ் கொல்லங்கலட்டி சைவத்தமிழ்வித்தியாசாலை, என்பவற்றை தன்னகத்தே கொண்ட கொல்லங்கலட்டி ஊராகும்.

அத்துடன் எமது ஊரான கொல்லங்கலட்டி ஆனது வெற்றிலைக்கு பெயர் பெற்ற ஊராகவும் இருக்கிறது.

அதனால்தான் எமது இலச்சினையிலும் வெற்றிலையும் விநாயகரும் புத்தகமும் இடம் பெற்று இருப்பதனை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

தொண்ணூறுகளில் இடம் பெற்ற இடம் பெயர்வுகள் எமது ஊரையும் விட்டு வைக்கவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

அப்படி இடம் பெயர்ந்து ஐக்கியராச்சியத்திற்குள் வந்தவர்களும் ஆங்காங்கே சிதறள்களாக வாழ்ந்து வந்தோம்.

அப்படி வாழ்ந்து வந்த எமது உறவுகளை எல்லாம் ஒன்று சேர வைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கினைக் கருத்தில்கொண்டு திரு. கமலக்கண்ணனின் முயற்சியால் இரண்டாயிரத்திப்பதினோராம் ஆண்டு முதல் முறையாக எமது உறவுகளை ஒன்று கூட்டி ஓர் ஒன்றுகூடல் நடாத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து இரண்டாயிரத்திப் பன்னிரெண்டாம் ஆண்டு கூட்டப்பட்ட ஒன்று கூடலின் போது இந்த ஒன்று கூடல்கள் வெறும் பொழுதுபோக்குக்களாக மட்டும் இல்லாமல் எமது ஊரினை வளப்படுத்துவதற்கான ஓர் அமைப்பாக வளரவேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.

அதன்படி கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் ஐக்கிய இராச்சியம் என பெயர் இடப்பட்டு, அதற்கான இலச்சினையும் வடிவமைக்கப்பட்டது.

அத்துடன் இந்த அமைப்பின் ஊடாக எமது ஊரிற்கு இயன்றவரை உதவுவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் ஒன்று கூடலை நடாத்தி எமது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதோடு எமது இளைய சந்ததியையும் எம்முடன் இணைத்துக்கொள்வது, இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கலைக்கொழுந்து எனும் இந்த நிகழ்வினை நடாத்தி இதன் மூலம் சேகரிக்கப்படும் நிதி மூலம் எமது ஊருக்கான தேவைகளை இயன்றவரை நிறைவேற்றுவது எனவும் அத்துடன் இரண்டு வருடங்களிற்கு ஒருமுறை உறுப்பினர் தேர்வு மூலம் புதியவர்கள் மற்றும் திறமை உள்ளவர்களை உள் வாங்குதல் எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டது.

கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் ஐக்கிய இராச்சிய கிளையின் கடந்த நான்கு வருட உழைப்பின் மூலம் எமது ஊர் கோவில், பாடசாலைக்கான உதவிகளை நாம் அனைவரும் சேர்ந்து செய்துகொண்டு இருப்பதனை நீங்களனைவரும் நன்கு அறிந்து கொண்டு இருக்கீன்றீர்கள்.

மேலும் மேலும் எமது அமைப்பின் மூலம் இயன்றவரை எமது அடையாளங்களை பாதுகாக்கவும், எமது ஊரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களை பாதுகாக்கவும் எமது கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் எமது இளைய சந்ததிக்கு ஓர் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என்று எமது அமைப்பு விரும்புகிறது.

உறவுகளே நண்பர்களே எமது அமைப்பின் நோக்கம், எமது ஊரின் தேவையான வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆகையினால் உங்கள் ஆரோக்கியமான கருத்துக்களை நல்ல முறையில் பகிர்ந்து கொண்டு நாம் அனைவரும் சரியான பாதையில் பயணம் செய்ய முன் வாருங்கள் என அழைப்பு விடுத்து எனது உரையை முடிக்கின்றேன்

நன்றியுடன்.

**திருமதி கௌரி குமார்**


**தலைவர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



எல்லாக் கொல்லங்கலட்டி மக்களுக்கும், பிரித்தானியாவில் இயங்கும் கொல்லங்கலட்டி ஒன்றியத்திற்கும் எமது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

தற்போது கொல்லங்கலட்டி மக்கள் உலகில் பல நாடுகளிலும் செறிந்து வாழ்கின்றனர்.

அவர்கள் எங்கு இருந்தாலும் தமது தாய் மண்ணை, தாம்பிறந்த ஊரை நேசித்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

கொல்லங்கலட்டி இலங்கை இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அகப்பட்டிருந்தது நாம் அறிந்ததே. அதனால் அவ்வூர் மக்கள் எல்லோரும் புலம்பெயர்ந்து இலங்கையில் பல ஊர்க ளிலும் வாழும் நிலை ஏறக்குறைய 30 வருடங்களாக இருப்பது உண்மை.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்ததின் பின் கொல்லங்கலட்டியும் இராணுவத்தினால் மக்களுக்கு விடப்பட்டு இப்பொழுது பலர் ஊருக்கு திரும்புகின்றார்கள்.

அவர்களுடைய வீடு, வாசல், உடமைகள், பாடசாலை, கோயில்கள் முதலியவை கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், அந்த ஊர் கட்டமைப்பை பழைய படி நிர்மாணிப்பது ஒரு கடினமான கடமையாக நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

விளிசிட்டி, வித்தகபுரம், என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் என்ற வகையில், அயல் கிராமமாகிய கொல்லங்;கலட்டிக்கு பல முறை செல்வதுண்டு. நாம் விரும்பி வழிபடும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்கு கொல்லங்கலட்டி வழியாக போவோம். அப்பொழுது எனது நண்பர்களை சந்திப்போம், அவர்களுடன் அன்பாகப் பழகுவோம்.

கொல்லங்கலட்டி நல்ல செழித்த நிலமாக வாழைத்தோட்டம், வெங்காயப் பயிர்கள், புகையிலைப் பயிர்கள், காய்கறித்தோட்டம்., வெற்றிலைத் தோட்டங்கள் எல்லாம் செறிந்த ஒரு ஊராக இருந்தது.

கமக்காரர்களும், பல இளைப்பாறிய மலேசியாவிருந்து திரும்பிவந்த பெரியார்கள், சிறந்த ஆசிரியர்கள், அரச உத்தியோத்தர்கள் பலர் அங்கு வாழ்ந்தார்கள்.

அந்த ஊரிலிருந்து பல மாணவர்கள் கொல்லங்கலட்டிப் பாடசாலையில் கல்வியை முடித்துக் கொண்டு, பின் மகாஜன கல்லூரியில் கல்வி கற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றதை நான் அறிவேன்.

நான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், வித்தகபுரம், கீரிமலை போன்ற ஊர்களில் வாழ்பவர்கள் மிகவும் அன்னியோன்னியமாக, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ்ந்ததை நான் அறிவேன். இப்பொழுது மேற்கத்திய நாடுகளில்; குறிப்பாக பிரித்தானியா, ஜெர்மனி, அமெரிக்கா, கனடா அத்துடன் அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, மலேசியா போன்ற நாடுகளில் வாழும் கொல்லங்கலட்டி மக்கள் தமது பழைய ஊரை கட்டியெழுப்பி முந்திய செழித்த நிலைக்கு கொண்டு வருவார்கள்; என்பது எனது கனவு.

பிரித்தானியாவில் இயங்கிவரும் ஒன.றியத்தலைவர், செயலாளர், தனாதிகாரி, மற்றும் அங்கத்தவர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**வணக்கம்**
**வைத்தியகலாநிதி நவரத்தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Patron



கொல்லங்கலட்டி ஊர் உறவுகள் ஒன்றாக கூடி எடுக்கின்ற இந்த ஆண்டு விழா சிறப்பாக நடந்தேற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

1953ல் பாடசாலை போக ஆரம்பித்த காலம் தொடக்கம் 1970ம் ஆண்டு தொடக்கத்தில் லண்டன் வரும் வரை கொல்லங்கலட்டி ஊர் சூழலில், மண் வாசனையில் தான் வளர்ந்தேன்.

கொல்லங்கலட்டி ஊர் பற்றிய இனிமையான நினைவுகள் எனது உள்ளத்தில் நிலையாக இடம் பெற்று உள்ளது.

ஊர் உறவுகள், பாடசாலை தோழர்கள் எல்லோரையும் இங்கு இங்கிலாந்தில் பார்க்கும் போது பசுமையான பழைய ஞாபகங்கள் நினைவுக்கு வருகின்றன.

கொல்லங்கலட்டி ஊருக்கு ஒரு ஒன்றியம் அமைத்து, ஊர் உறவுகளை இணைத்த இந்த சங்கத்தின் நிர்வாகிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இந்த நாட்டிலும் சிதறி வாழும் எங்களை இந்த சங்கம் ஒன்று இணைக்கிறது.

பழைய நண்பர்களை சந்திக்க சந்தர்ப்பம் அளிக்கிறது. ஊரின் வளர்ச்சிக்கும் இந்த சங்கம் மிகவும் உதவுகிறது.

கொல்லங்கலட்டி ஊரை நினைக்கும் போது பிள்ளையார் கோவில், அதன் முன்னால் உள்ள கனிஷ்ட பாடசாலை, பின்னால் உள்ள கேணி, அருகாமையில் உள்ள மடம், வெற்றிலை தோட்டங்கள், இவை எல்லாம் ஞாபகத்துக்கு வரும் முக்கிய அடையாளங்கள்.

சென்ற வருடம் ஊருக்கு சென்றபோது, ஊரின் சிறப்பை எடுத்து சொல்லுகின்ற சரித்திரச் சின்னங்களாக இவை இன்றும் காட்சியளிப்பதை கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இதை விட கொல்லங்கலட்டிக்கு பெருமை சேர்த்த பல பிரபலமானவர்களும் ஞாபகத்துக்கு வருகிறது.

கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் வன்னியசிங்கம், சமாதான நீதவனாக இருந்த திரு சரவணமுத்து, சாரண இயக்கத்திற்காக உழைத்த விஸ்வநாதன் மாஸ்ரர், மற்றும் மகாஜனா கல்லூரியில் படிப்பித்த பல திறமையான ஆசிரியர்கள் கொல்லங்கலட்டியை சேர்ந்தவர்கள்.

எனது பேரனார் தம்பு மாஸ்ரர் காலத்தில் படிப்பித்த சிற்றம்பலம் மாஸ்ரர், அதன் பின் இணைந்த கார்த்திகேசு மாஸ்ரர், சிவசுப்பிரமணியம் மாஸ்ரர், வேலுப்பிள்ளை ரீச்சர், பொன்னம்பலம் ரீச்சர், சரவணமுத்து ரீச்சர், கனகராஜா மாஸ்ரர் இப்படி பலர் மகாஜனாவுக்கும், கொல்லங்கலட்டிக்கும் பெருமை சேர்த்தவர்கள்.

கொல்லங்கலட்டி உப தபால் கந்தோர் எங்கள் வீட்டு வளவை உள்ளடக்கி இருந்தது.

நாங்கள் மாவிட்டபுரம், கீரிமலை போகும்போது கொல்லங்கலட்டியை முழுதாக கடந்துதான் போக வேண்டும்.

ஊரவர்கள் எங்கள் வீட்டை கடந்துதான் மறுபக்கம் போவார்கள்.

இதனால் எல்லோரையும் சந்திக்கும் வாய்ப்பு கூட இருந்தது.

புலம் பெயர்ந்து வாழ்ந்தும், ஊரை மறக்கக் கூடாது என்ற சிந்தனையை எங்கள் சந்ததியினருக்கு ஊட்டவும், சொந்த வேலைகள் மத்தியிலும், தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த சங்கத்தை ஆக்கி இயக்கி வரும் ஒவ்வொருவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இந்த கழகத்தின் பணி மேலும் தொடர எனது வாழ்த்துகள்.

வணக்கம்.

**வை. தயாளன்**
**Councillor - Royal Borough of Kingston Upon Thames**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை**

மாருதப்புரவீகவல்லிக்கு சகல வளங்களும்,நலங்களும் கொடுத்த கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பேணி இந்த கொழுந்து வளர்ந்து வையகம் முழுவதும் துளிர் விட்டு நல்ல அறிவு வளர்க்க,பண்பாடு வளர்க்க,செல்வம் வளர்க்க,வீரத்தை போற்ற இந்த மண்ணில் பிறந்த மக்களால் வெற்றிலைக் கொழுந்து வைத்து வாழ்ந்து வளம் பெருக்கி குழந்தைச் செல்வங்களைப் பெருக்கி உலகெங்கும் வாழவிட்டு தமிழின் பெருமையை பரப்பியவாறே கொழுந்து எனும் வருட நாளிதழ் வளர எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் ஆசியும், அருளும் கிடைக்க வேண்டுகின்றேன்.

சுபம்

**சு.கணேசலிங்கம் ஜயா**
**ஆலய சிவாச்சாரியார்**
கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் (கனடா)

இன்று கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் லண்டன் தனது கலைக்கொழுந்து 2017 விழாவை கொண்டாடுவதையிட்டு சகோதர கிளையான கனடா ஒன்றியம் மிகவும் பெருமையும் பூரிப்பும் அடைகிறது.

புலம்பெயர்ந்த மண்ணில் 2012 இல் ஆரம்பித்த இந்த சங்கத்தை தொடர்ந்து உயர்நிலைக்கு கொண்டுவர முயற்சிப்பதுடன் கோடைகால ஒன்றுகூடல் மூலம் மக்களின் தொடர்பையும் ஆதரவையும் திரட்டி உள்ளனர். இவர்கள் நமது கிராமத்து கோவில், பாடசாலை போன்ற சகலர்கும் பயன்படும் இடங்களுக்கு உதவுவது சகலரும் அறிவீர்.

இதேபோல் கனடா ஒன்றியமும் பாடசாலை, நூலகம் போன்ற வற்றினூடாக எமது கிராமத்தை முன்னேற்ற உதவிபுரிந்து வருகிறது.

புலம்பெயர்ந்த நாடுகளில்வாழ்ந்தாலும் பிறந்த கிராமத்தையும் கிராமத்தின் சின்னமான வெற்றிலை கொழுந்தையும் நினைவுபடுத்தி எம்மக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் கலைக் கொழுந்து பல பிறந்தநாட்களை கொண்டாட வாழ்த்துகிறோம்.

**கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் கனடா**

LEICESTER SQUARE BOX OFFICE
OFFICIAL HALF PRICE & DISCOUNT THEATRE TICKET BOOTH

Telephone Bookings:
020 7494 2301 or 020 7087 2999
General Enquiries: 020 7087 2998
Email: info@lsbo.co.uk

42 Cranbourn Street, London, WC2H 7AN
48 Cranbourn Street, London, WC2H 7AN
Westfield Shopping Centre

lsbo.co.uk
theatrebookings.com

HALF THE PRICE
TWICE THE FUN

Official Agency

STAR SECURE TICKETS from AUTHORISED RETAILERS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலை வரலாறு

திரு ஆறுமுக நாவலர் காலத்திலே சைவமும் தமிழும் தழைத்தோங்க அவர் பல சைவத்தமிழ் பாடசாலைகளை நிறுவியும் பிறர் நிறுவுவதற்கு உதவி செய்தும் வந்தார்.

அந்த வகையில் திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் நாவலரின் பணியைத் தொடர எண்ணி கொல்லங்கலட்டியில் மாருதப்புரவீகவல்லியினால் ஸ்தாபிக்கப்பட்ட விநாயகர் ஆலயத்திற்கு முன்னால் தனக்கு உரித்தான 9 குளிஅளவைக்கொண்ட காணியில் ஒரு கொட்டிலை அமைத்து ஊரில் உள்ள பிள்ளைகளை அழைத்து கல்வி புகட்டினார்.

சிறீமான் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் ஸ்மித் பாதிரியார் அவர்களின் துணையுடன் 1872ம் ஆண்டு 40 மாணவர்களையும் 3 ஆசிரியர்களையும் கொண்ட இரு மொழிப் பாடசாலையாக அரசினர் அங்கீகரித்து பதிவு செய்தனர்.

1873ம் ஆண்டு முதன் முறையாக வருடாந்த பரீட்சை நடைபெற்றது.

1882ம் ஆண்டு இரு மொழிப் பாடசாலை தமிழ் பாடசாலையாக மாற்றப்பட்டது.

அரசின் அங்கீகாரம் பெறும் வரை கிராம மக்களின் உதவியுடன் வேதனம் எதுவும் இன்றி ஆசிரியர்கள் சேவை செய்தமை பாராட்டுக்குரியது.

ஸ்ரீமான் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் 1915ம் ஆண்டு பங்குனி மாதம் இறைவனடி சேர்ந்தார்.

வேலுப்பிள்ளை அவர்களின் உறவினர்கள் மற்றும் மூத்த மகன் வே.விநாயகமூர்த்தி ஆகியோர் பாடசாலையை நடாத்தி வந்தனர். அவர்களின் முயற்சியால் 9 குளி ஒரு பரப்பாகியது. சிறிய கொட்டில் பெரிய கொட்டிலாக மாறியது.

1918ம் ஆண்டு ஊர் பெரியோர்களின் வேண்டுதலுக்கு இணங்க இப் பாடசாலை கலவன் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது.

1915-1929 ஆகிய காலப் பகுதியில் இப்பாடசாலை பல வழிகளிலும் முன்னேறியது.

200 மாணவர்களைக் கொண்ட பிரதம பாடசாலையாக விளங்கியது.

1930ம் ஆண்டு ஸ்தாபகரின் இளைய மகன் திரு.ஆ.வே. சிற்றம்பலம் அவர்கள் முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

அவர் முகாமையின் கீழ் பல வழிகளிலும் வளர்ச்சியடைந்தது.

ஐந்தாம் வகுப்பு வரை நடைபெற்ற ஆரம்ப பாடசாலையாக திகழ்ந்த இது பிரதம பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

நம் மாணவர்கள் எமது பாடசாலையிலேயே உயர் கல்வி கற்பதற்காக இப்பாடசாலை கனிஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

1932ம் வருடம் கனிஷ்ட பாடசாலை மாணவர்கள் தராதர பரீட்சைக்கு தோற்றி அணைத்து மாணவர்களும் சித்தியடைந்தனர்.

1933ம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

1934ம் ஆண்டு மாணவர்கள் சிரேஷ்ட பரீடசைக்கு தோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைந்தனர்.
1936ம் ஆண்டு 300க்கு மேற்பட்ட மாணவர்களையும் 10ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலையாக விளங்கியது. 1952ம் ஆண்டில் ஆறாம் வகுப்பில் இருந்து ஒரு பாடமாக ஆரம்பிக்கப்பட்ட நெசவு பயின்ற மாணவர்கள் க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்து நெசவு ஆசிரியர்களாகவும், தொழிலாளர்களாகவும் விளங்கினார்கள்.

1956ம் ஆண்டு சங்கீதம் ஒரு பாடமாக இணைக்கப்பட்டது. முகாமையாளர் திரு. ஆ. வே. சிற்றம்பலம் ஆசிரியர் அவர்களின் காலத்தில் தான் 1 பரப்பு நிலம் 3 பரப்பு நிலமாகவும் 60X33அடி மண்டபம், ஆரம்ப வகுப்பு மண்டபம், நெசவு பயிலும் மண்டபம் என்பன அமைக்கப்பட்டு அதற்கேற்ப ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

இக் காலம் பாடசாலையின் பொற்காலம் என் குறிப்பிடலாம். நவராத்திரி காலங்களில் பாடசாலை மாணவர்கள் வகுப்பு ரீதியாக பூசைகளில் ஈடுபட்டனர்.

விஜயதசமி அன்று வித்தியாரம்பம் ஆலய சிவாச்சாரியார்களும் பாடசாலை முகாமையாளர், அதிபர், ஆசிரியர்கள் இணைந்து நடாத்துவது சிறப்பு அமசமாகும்.

1961ம் ஆண்டில் இப்பாடசாலை அரசாங்கத்தினால் வசீகரிக்கப்பட்டு 1962ம் ஆண்டிலிருந்து அரச பாடசாலையாக இயங்கி வருகின்றது.

பாடசாலையின் பரப்பளவு 9 ஆகவும் பல கட்டிடங்கள், திறந்த வெளியரங்கு, விளையாட்டு மைதானம் என்பனவும் கொண்ட பாடசாலையாக இருந்தது. திரு. வே.சிற்றம்பலம் அவர்களின் காலத்தில் வித்தியாசாலையின் கீதம் இயற்றபட்டது.
1972ம் ஆண்டு புதிய பாடசாலைக்கீதம் இயற்றபட்டது.
பின்னர் 1984 ம் ஆண்டு ஸ்தாபகருக்கு நன்றி செலுத்தும் முகமாக ஸ்தாபகரின் பெயர், முகாமையாளரின் பெயர் இணைந்த புதிய பாடசாலையின் கீதம் புலவர் பார்வதிநாதசிவம் அவர்களால் இயற்றபட்டு தற்போது பாடப்பட்டு வருகின்றது
1990 – 1994 வரை பண்டத்தரிப்பு, சித்தன்கேணி பகுதியில் நடைபெற்று இங்கு இருக்க முடியாத நிலை ஏற்பட உடுவிலில் இயங்கியது.

1994 ம் ஆண்டு தற்காலிகமாக பாடசாலை மூடப்பட்டது.

2011 ம் ஆண்டு மீள் குடியேற்றம் நடைபெற்றபோது பாடசாலைக் கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டன.

02.01.2013 ல் திரு.வே.விமலன் அதிபராக பொறுப்பேற்று பாடசாலையை நடாத்தி வந்தார். ஒரு மாதத்தின் பின் இடமாற்றம் பெற்று சென்றார்.

இவரது காலத்தில் ஒரு மாணவன் அனுமதி பெற்று கல்வி கற்று வந்துள்ளான்.

06.02.2013 ல் திருமதி. த. வசந்தராணி அவர்கள் அதிபராக பொறுப்பேற்றார். ஆரம்பத்தில் ஒரு மாணவனும் ஒரு ஆசிரியருமாக இருந்தது. பின்னர் மாணவர்களும் அதிகரிக்க ஆசிரியர்களும் நான்காக உயர்ந்தனர்.

முதல் ஆசிரியர் திருமதி. பு. சேகரர் ஆவார். அவர்கள் தற்போது காலமாகி விட்டார்.

2014ம் ஆண்டு இரு மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி இருவரும் 100% சித்தி என்ற பெருமையைப் பெற்று தந்தனர்

செல்வி. ந. டிஸ்னுகா
செல்வன். பே. சுவாரஸ்யன்

2016ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 04 மாணவர்கள் தோற்றி நால்வரும் சித்தி புள்ளியைத் தாண்டி 100% சித்தியைப்பெற்று பாடசாலைக்கு பெருமையைத் தேடித்தந்துள்ளனர்.

செல்வி. ப. மோகனாங்கி – 142 புள்ளிகள்
செல்வன். ப மோகன்ராம் – 139 புள்ளிகள்
செல்வி. ம. ஜனனி – 96 புள்ளிகள்
செல்வன். ர. கீதன் – 74 புள்ளிகள்

இம் மாணவர்களால் எமது பாடசாலை புலமைப்பரிசில் 100% சித்தியடைந்த பாடசாலைகளுள் ஒன்றாக கணிக்கப்பட்டு அதிபரையும், வகுப்பு ஆசிரியரையும் யாழ் வேந்தன் கலைக்கல்லூரியில் கௌரவித்து பாடசாலைக்கு பாராட்டு மடலும் வழங்கப்பட்டது.

தெல்லிப்பளைக் கோட்டத்தில் இரு பாடசாலைகள் மட்டுமே 100% சித்தியைப் பெற்றனர்.

அதில் ஒன்று எமது பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

2015ம் ஆண்டு குடும்ப மட்ட மனனப்போட்டியில் 04 மாணவர்கள் பங்கு கொண்டு நால்வருமே 2ம் இடத்தினைப் பெற்று கோட்ட மட்டத்திற்கு தெரிவானார்கள்.

செல்வன்.ரி.தனுஷ்கர்
செல்வி.ந.குகன்யா
செல்வி.யோ.தர்சிகா
செல்வி.ப.மோகனாங்கி

2015 இல் சித்திரப் போட்டியில் குடும்பமட்டத்தில் ஒருவர் 2ம் இடத்தினை பெற்று கோட்ட மட்டம் தெரிவாகியுள்ளார்.

செல்வி.வ.அஷ்விகா.
2016 இல் குடும்ப மட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரப்போட்டியில் ஒருவர் 2ம் இடத்தினையும், இருவர் 3ம் இடத்தினையும் பெற்றனர்.

செல்வி. சி. தருணிகா. 2ம் இடம்
செல்வி. ப. அஷ்விகா 3ம் இடம்
செல்வன். ர. கீதன் 3ம் இடம்

எமது பாடசாலையில் முன்பள்ளியும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. வருடாவருடம் நிறுவினர்தினம், இல்ல விளையாட்டு போட்டி, நவராத்திரி விழா,சிறுவர் தினம் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பெற்றோர்கள் ஆசிரியர் தினத்தினை நடாத்தி வருகின்றனர்.

எம் முன்னே இருந்து பாடசாலையை வளர்ப்பதற்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு வருடாவருடம் பொது அறிவு, கோலப்போட்டி, மாலைக்கட்டும் போட்டி, தோரணம் செய்யும் போட்டி என்பனவற்றை நடாத்தி மாணவர்களுக்கு பரிசில் வழங்கி வருகின்றோம்.

இப்பாடசாலையில் கற்பித்து வந்த திருமதி. பு. சேகர் ஆசிரியர் அன்று சிவபதமடைந்துள்ளார்.தற்பொழுது எமது பாசாலையிலுள்ள ஆசிரியர்கள்

திருமதி. தா. வசந்தராணி (அதிபர்)
திரு. தா. பத்மநாதன் (ஆசிரியர்)
திருமதி. ச. பத்மா (ஆங்கில ஆசிரியர்)
திருமதி.யோ.ஸ்ரீதேவி (ஆரம்பகல்வி)
தொண்டர் ஆசிரியர்களாக இருவர் பணிபுரிகின்றனர்.
செல்வி. கு. பிருந்தா
திருமதி. மோ. சியாமினி

மாணவர் எண்ணிக்கை இப்போது 30ஆக உள்ளது. 2017ம் ஆண்டு தை மாதம் 40ஆக அதிகரிக்கவுள்ளது.

இவ்வதிகரிப்பு பாடசாலையின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக் காட்டுகின்றது.

2016ம் ஆண்டு எமது பாடசாலைக்கான கொடிக்கீதம் இயற்றப்பட்டுள்ளது. இதனை புலவர். ம. பார்வதிநாதசிவம் அவர்களின் புத்திரன் திரு.ம.பா.மகாலிங்கசிவம் (ஆசிரிய ஆலோசகர் - தமிழ்) அவர்கள் இயற்றியுள்ளார்.

எமது பாடசாலையின் வளர்சிக்கு காரணம் பெற்றோர் பாடசாலை மீது பற்றும் அதிபர், ஆசிரியர்கள் மீதுள்ள நம்பிக்கையும் என்பது குறிப்பிடத்தக்கது.

2013 ம் ஆண்டு திருமதி. தா. வசந்தராணி அவர்கள் அதிபராக பொறுப்பேற்றபின்னர் அவரின் முயற்சியாலும் பழைய மாணவர்கள், புலம் பெயர் பழைய மாணவர்கள், மக்கள் ஒன்றியம், ஸ்தாபகரின் குடும்ப அங்கதத்தவர்கள் ஆகியோரின் உதவிகளாலும் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CASUARINA tree
Restaurant & Bar

Sri Lankan & Indo Chinese Cuisine



Bed and Breakfast
Function Room
Beer Garden
Shisha Bar
Ample car park









## 020 8648 4868

407, London Road, Mitcham, Surrey, CR4 4BG, United Kingdom.

www.casuarinatree.com    Info@casuarinatree.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் / ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோயில்

Sri Veeragaththi Viuajakar Temple / Srimath Sithambareswara Suvami Temple

புனருத்தாரண சபை Rehabilitation Committee

Temples Regd No : HA/5/JA/997
Committee Regd No :

Mavai Kollankaladdy,
Tellippalai, Sri Lanka.
........./........./201.......

President
K.Thuraisinkam

Secretary
G.Annaparipooranam

Treasurer
S.Paheetharan

**கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்**
**லண்டன்**

**வாழ்த்துச் செய்தி**

இலண்டனில் உள்ள கொல்லங்கலட்டி வாழ் மக்கள் ஒன்றிணைந்து பல நற்பணிகள் ஆற்றி வருவதையிட்டு நாம் மன மகிழ்ச்சி அடைகின்றோம். தங்களால் வெளியிடப்படும் கொழுந்துச்சஞ்சிகை எமது கொல்லங்கலட்டியின் வரலாற்றையும் மண்ணின் மகிமையையும் எடுத்துக்கூறும் சஞ்சிகையாக மிளிர்வதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். வளர்ச்சிக்காக ஒன்றிய உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படும் திறன் மேன்மேலும் வளர வேண்டுமென வீரகத்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**புனருத்தாரண சபையினர்,**
**வீரகத்தி விநாயகர் ஆலயம்,**
**கொல்லங்கலட்டி**

Secretary
Rehabilitations Committee
Sri Veeragaththi Venajagar Temple
Srimath Sithambareswara Suvami Temple
Kollankaladdy Tellippalai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் / ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோவில்

Sri Veeragaththi Vinajakar Temple / Srimath Sithambareswara Suvami Temple

புனருத்தாரண சபை Rehabilitation Committee

Temples Regd No : HA/5/JA/997
Committee Regd No :

Mavai Kollankaladdy,
Tellippalai, Sri Lanka,
........../........./201......

President
K.Thuraisinkam

Secretary
G.Annaparipooranam

Treasurer
S.Paheetharan

**தலைவர்,**
**கொல்லலங்கலட்டி மக்கள் ஒன்றியம்,**
**லண்டன்**

வீரகத்தி விநாயகர் ஆலய
புனருத்தாரண வேலைகள் சம்பந்தமானது

யுத்தத்தின் பின் கொல்லங்கலட்டியில் மீள் குடியேறிய மக்களால் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் அழிவுகளை சீர்செய்யும் நோக்கமாக மீள புனருத்தாரண சபை உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சபை தாமாகவே விரும்பி முன் வந்த வெளிநாட்டில் வாழும் எம்மக்களிடமும் எம் ஊரில் வாழும் மக்களிடமும் உதவிகளைப்பெற்று ஆலயத்தில் சில கட்டட புனருத்தாரண வேலைகளை நிறைவு செய்துள்ளது.

மேலும் பின்வரும் வேலைகளை முன்னெடுத்து செய்ய வேண்டிய தேவை உள்ளது.

- அன்னதான மண்டபம் அமைக்க காணி வாங்குதல்
- அன்னதான மண்டபம் அமைத்தல்
- ஆலய கூரை முற்றுமுழுதாக மீள் புனரமைத்தல்
- ஆலயத்திற்கு வர்ணம் பூசுதல்
- ஆலயத்திற்கு கோபுரம் அமைத்தல்

இவ்வேலைகளை புனரமைப்பதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. இதை படிப்படியாக நிறைவு செய்வதற்கு புனருத்தாரண சபை தங்கள் ஒன்றியத்தின் உதவியை வேண்டி நிற்கின்றோம்.

**புனருத்தாரண சபையினர்,**

Secretary
Rehabilitations Committee
Sri Veeragaththi Venajagar Temple
Srimath Sithambareswara Suvami Temple
Kollonkaladdy Tellippalai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை
## Veerakaththi Aranery School

Regd No /பதிவு இல: HA/7/56/14/268

Date of Register /பதிவுத் திகதி: 04/04/2016

மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பழை.

Maviddapuram South,
Tellippalai.

......./......./201.......

**கௌரவ தலைவர்**
**கொல்லங்கலட்டி ஒன்றியம் லண்டன்**

அம்மணி

பல இடர்களுக்கும் முகம்கொடுத்த எமது மக்கள் 20 வருடங்களுக்கு பின் தமது சொந்த மண்ணில் மீளக்குடியமர வாய்ப்பு கிடைத்தது.

எமது கிராம முன்னேற்றம் கருதி பல பணிகளை மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆற்றி வருகின்றது.

அத்துடன் எமது கிராமத்தின் இளம் சிறார்களின் எதிர்காலத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டு செல்வது பெரியார்களாகிய எமது கடமை என்ற வகையில் சமய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நன்நோக்கத்தினால் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை ஒன்றையும் சிறப்பாக நடாத்திவருகின்றோம்.

இங்கு வாழும் மக்கள் பலர் வாழ்வாதார பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கின்றனர்.

ஆயினும் எமது மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு அரசாங்கத்தில் இருந்தோ அல்லது வேறு நிறுவனத்திலிருந்தோ இதுவரை நிதியுதவி ஒன்றும் கிடைக்கவில்லை.

மாவிட்டபுரம்தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கென சொந்தமான காணியோ கட்டிட வசதிகளோ இன்றி தற்காலிகமாக அமரர் சிற்றம்பலம் கணேசலிங்கம் அவர்களின் இல்லத்தில் இயங்கி வருகின்றது என்பதை தங்களின் கவனத்திறகு அறியத்தருகின்றோம்.

எமது கிராம மக்களின் முன்னேற்றம் கருதி குடும்ப நலனோம்பல் உதவி மற்றும் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் இசைக்கலை பயில்வதற்கு இசைக்கருவிகள் வசதியும் இல்லை எனவே இவற்றை தங்களின் கவனத்திற்கு அறியத் தருவதோடு இயலுமான உதவிகளை வழங்கி எமது கிராம வளர்ச்சிக்கான நோக்கம் நிறைவேற உதவிசெய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகின்றேன்.

இங்கனம்
தங்கள் உண்மையுள்ள
**திருமதி. தனபாலசிங்கம் இராசமணி**
**தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KMO members at Summer Get together 2016



KMO members at Mahajana College Get Together 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
# Maviddapuram South Women Rural Development Society

மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பழை.

Regd No/ பதிவு இல: NP/DRD/JH12/J232/W1123
Date of Register/ பதிவுத் திகதி: 21/01/2014

Maviddapuram South,
Tellippalai.

....../....../201....

## மாவிட்டபுரம் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையும்

எமது மக்கள் பல இன்னல்களையும் கடந்து 20 வருடங்களின் பின் தமது சொந்த மண்ணில் வாழவேண்டும் என்ற ஆவலில் பற்றைக்காடுகளாகவும் இடிபட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்களாகவும் காட்சியளித்த எமது கிராமத்தில் மீளக் குடியேறி பல இடர்களின் மத்தியில் எமது கிராமம் என கூறக்கூடியவகையில் இன்று தலைநிமிர்ந்துள்ளது 20 வருடங்களுக்கு பின் நோக்கியதாக இருந்தாலும் தற்போது எமது மக்களின் அயராத உழைப்பால் ஓரளவேனும் முன்னேற்றம் கண்டுள்ளது எனலாம்.

எமது கிராமம் யுத்தகாலத்திற்கு முன்னரான தோற்றத்தையும் கல்வி மற்றும் கலைகளில் வளர்ச்சியையும் கொண்டதாக மிளிர வேண்டும் என்பதே எமது அவா. ஆனாலும் மீண்டும் கட்டியெழுப்பதற்கு இன்றுவரை போராட வேண்டிய நிலையிலே உள்ளோம்.

மாவிட்டபுரம் தெற்கு J/232 கிராம அலுவலர் பிரிவில் எமது சங்கம் 21.01.2014 பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

இடவசதியோ கட்டிட வசதியோ இல்லாத நிலையில் அமரர் சி. கணேசலிங்கம் அவர்களின் வீட்டில் தற்காலிகமாக இயங்கி வருகின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது கிராம முன்னேற்றம் கருதி பல செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றது. எமது சங்கத்தில் 65 அங்கத்தவர்கள் உள்ளனர்.

எமது நிர்வாக சபையில் 14 நிர்வாக சபை உறுப்பினர்கள் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

நிர்வாக சபை உறுப்பினர்களின் பெயர் விபரம்

திருமதி. தனபாலசிங்கம் இராசமணி – தலைவர்

செல்வி. தியாகராசா லசிகா – செயலாளர்

திருமதி. கருணாகரன் நகுலேஸ்வரி – பொருளாளர்

திருமதி ஞானேஸ்வரன் அன்னபரிபூரணம் – உப தலைவர்

திருமதி சரவணபவன் கமலேஸ்வரி – உப செயலாளர்

திருமதி துரைரத்தினம் ஜெயபவாணி – நிர்வாகசபை உறுப்பினர்

திருமதி. கதிரமலை புஸ்பராணி

திருமதி. கிருஸ்ணராசா மகேஸ்வரி

திருமதி சிவசுப்பிரமணியம் கமலாம்பிகை

திருமதி விஜயராகவன் இராஜேஸ்வரி

திருமதி வசந்தகுமார் சியாமளா

திருமதி பாலச்சந்திரன் தேவசேனா

செல்வி. அருளானந்தகுமாரசுவாமி சஜிதா

திருமதி சந்திரன் ஜெயக்குமாரி கணக்காய்வாளர்

எமது முதன்மை பணிகளாக கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயச் சூழல் சுத்தமாக வைத்திருப்பதற்காக எமது அங்கத்தவர்கள் குழுவாக செயற்பட்டு ஆலயத் தொண்டினை ஒவ்வொரு கிழமையும் மேற்கொள்கின்றோம்.

அடுத்ததாக எமது சங்கத்தினால் வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஒன்றும் நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ் அறநெறிப் பாடசாலையில் 40 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00 மணியில் இருந்து 12.00 மணிவரை.

இவ் அறநெறிப்பாடசாலையில் மாணவர்களின் கலையாற்றலை வளர்ப்பதற்காக பண்ணிசை நடனம் சங்கீதம் ஆகியவையும் இந்து சமயத்தினை வளர்ப்பதற்காக சமயம் தொடர்பான சொற்பொழிவுகள் மற்றும் நாயன்மாரகளின் குருபூசை தினங்களும் நடாத்தப்படுகின்றன.

மேலும் குருபூசை நிகழ்வினையொட்டி மாணவர்களுக்கிடையே பண்ணிசைப் போட்டிஇ பேச்சுப் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகட்டுரைப்போட்டி போன்றவற்றை நடாத்தி வருகின்றோம்.

மேலும் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் அறநெறி மாணவர்களுக்கென சீருடையும் வழங்கியுள்ளனர்.

மற்றும் இவ் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் பரிசில்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவர்களால் நடாத்தப்படும் நிகழ்வின் போது எமது அறநெறி மாணவர்கள் சிறப்பாக பங்கேற்று நிகழ்சிகளையும் செய்து வருகின்றனர்.

அத்துடன் வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்படும் பரீட்சைக்காக எமது அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக விசேட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றது.

சிறுவர்களின் எதிர்காலம் கருதி சமய விழுமியங்கள் மற்றும் கலை கலாச்சாரத்தினை மேம்பட செய்வதற்காக பிரதி வெள்ளிக்கழமை தோறும் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கூட்டுப் பிராத்தனையை பெரியவர்கள் இசிறார்கள் என இணைந்து சிறப்பாக நடாத்தி வருகின்றோம்.

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவ காலங்களில் மாதர் சங்கமும் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் இணைந்து பண்ணிசை நிகழ்வுகளை நடாத்துவதோடு ஆலயத் தொண்டுகளிலும் ஈடுபடுகின்றார்கள்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு லயன்ஸ்கிளப் மூலம் கற்றல் உபகரணங்களையும் பெற்று வழங்கியுள்ளோம்.

எமது மாதர் சங்கத்தின் மூலமாக வசதிகுறைந்த கிராம மக்களுக்கு மூக்குக் கண்ணாடி "சுவ செவன" நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

கிராம மக்களின் வாழ்வாதாரம் பெருகுவதற்கு ஏதுவாக எமது மாதர் சங்கத்தின் மூலமாக விவசாய திணைக்களத்தின் மூலம் பழமரக் கன்றுகள் பெற்றுக் கொடுத்து எம்மாலான பணிகளை சிறப்பாக ஆற்றுகின்றோம்.

மகளிர் தினத்தையொட்டி மாதர்சங்கங்களுக்கிடையே இடம் பெற்ற போட்டிகளில் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் பலர் பங்குபற்றி பல பரிசில்களையும் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு எமது சங்கத்தினால் கிராம வளர்ச்சிக்கான முன்னேற்ற நோக்கம் கொண்ட பணிகள் நடைபெறுகின்றது.

நன்றி

**திருமதி. தனபாலசிங்கம் இராசமணி**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது ஊரின் ஓர் நாள் பொழுது

மார்கழிக்குளிரில் ஓர்
விடியற்காலை தெருவில்
திருவெம்பாவை பாட்டு கேட்டு
திரும்பிப்படுத்தேன்.

சற்று கண் அயர்ந்தேன்.

சமிஞ்சை தந்தது சீமெந்துத்
தொழிற்சாலையின் சங்கொலி.

எழுந்து இரு தடவை முகம்
கழுவி, நான்கு முறை தலை சீவி
விரைந்தேன் சாலைக்கு.

பொறுமையுடன் காத்திருந்து பள்ளி
செல்லும் கடைசி மாணவியையும்
பொறுப்புடன் வழியனுப்பி
வைத்துவிட்டு வந்தேன் வீட்டுக்கு.

ஒரு பத்துப், பத்தரை இருக்கும்
சங்கக்கடைக்கு முன்னால் ஒரு
சலசலப்பு.

எட்டிப் பார்த்தேன் என்னவென்று,
நிவாரண சீனி முடிந்ததால்
பிரச்சினை என்றார்கள்.

மதியம் ஒரு மணி மண்டையை
பிளந்தது உச்சிவெயில்.

ஊரே உறங்கியது சற்று
அமைதியாக, மாலை நான்கு மணி
பிள்ளையார் கோவில் மணியோசை
அழைத்தது.

ஊரில் இளவட்டங்கள்
உதைபந்து, கிளித்தட்டு மறித்தல்
என நிரம்பியது கோவில் வீதி.
கொஞ்சம் பொறுத்தேன்
செக்கல் பொழுது வானம்
இளஞ்சிவப்பானது.

ஊரோ சிறு கறுப்பானது.

வெற்றிலைக்கொல்லையில்
ஓடும் வாய்க்கால் தண்ணீரில்
குளித்தும் நிறம் மாறாத எங்கள்
ஊர்க்காகங்கள், தோட்டத்தில்
இருந்து வீடு திரும்பும் காளை
மாடுகள், தாய்ப்பசுவை தேடும்
கன்றுக்குட்டியின் கதறலென
மிக ரம்மியமானது எமது ஊரின்
மாலைப்பொழுது.........

இன்னும் இருண்டது அன்றைய
வீரகேசரியின் அரசியலை
ஆராயும் பெருசுகள் கேணியடியில்
மாற்று அரசியல் செய்யும்
மற்றொரு கூட்டம் மடத்தடியில்
304ஐ மும்முரமாக விளையாடும்
இளைஞர்கள் கூட்டம், அப்புச்சி
மடத்தில்.


கொஞ்சம் தள்ளி வந்தால்
வன்னிய சிங்கத்தின் வீட்டிற்கு
முன்னால் நீண்ட தார்ச்சாலையில்
படுத்தபடியே கதை பேசும்
சிறுசுகள் கூட்டம்.

நானும் அதில் கலந்தேன்,
மெல்லிய குளிர் காற்று நள்ளிரவு
தாண்டியும் இதமாக சுட்டது தார்
ரோடு.

மெல்ல எழுந்து முதுகு மண்
தட்டி வீடு வந்து மெதுவாக
கேற்றை திறந்து படுக்கைக்கு
சென்றேன்.

உறக்கம் இல்லை காத்திருந்தேன்
மறுநாள் சங்கொலிக்காய்...........
மலரும் நினைவுகளுடன்..

**சி. கமலக்கண்ணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# எழில் கொஞ்சும் எமது கிராமம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்றும் இன்றும் என்றும்

ஊர் விட்டு ஊர் சென்றோம்
நாடு விட்டு நாடு வந்தோம்
நாமெல்லாம் கூடி மகிழ
இன மத பேதமின்றி இன்பமாய்
இனிமையாக பல மொழிகள் கற்றிட்டோம்.
புலம் பெயர்விலும் எமது மண், எமதூர், எமது நாடு
என ஏங்கி நிற்கும் எமது மக்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும்
தத்தமது ஊரினை மேம்படுத்த பின்வாங்கவில்லை.
அவ்வகையில் எமதூரான கொல்லங்கலட்டியையும்
புத்துயிர் பெற புதுவடிவம் பெற
எமது மக்கள் ஒத்துழைத்து வருகிறார்கள்.
எந்த நாட்டிலும் வசதியாக வாழ்ந்து விடலாம்
ஆனால் சொந்த ஊரில் மட்டுமே
நிம்மதியாக வாழ முடியும்.
பண்பாட்டின் அடித்தளமாக கலாச்சாரத்தின் களஞ்சியமாக
கல்வியும் கலையும் மண்ணின் மகிமையும்
இனத்தின் மொழியும் இயற்கையின் எழிலும்
நிறைந்த எம் ஊரின் தேவை எவையென அறிந்து
ஒத்துழைப்பு நல்கிட இணைந்து வாரீர்.

நன்றியுடன் வசந்தா நவரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kalaikkolunthu 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் பாடும் எங்களூரின் மேன்மையைப் பாடும்





எழில் பாடும் எங்களூரின் மேன்மையைப் பாடும்
எழில் பாடும் எம் நிலத்தின் வளம் பாடுமே
என்றென்றும் தன்பெருமை தனைப்பாடுமே
பொழிலெனவே கமுகுதென்னை பனை சூழ்ந்துமே
பொற்கதிரை மறைத்தும் நல்ல இசை பாடுமே

இந்தியநன் நிலத்திலுயர் கொல்லமென்றோங்கும்
இனிய திருவூரிருந்தும் வந்த நன் மக்கள்
சொந்தமெனக் கொண்ட நிலம் ஆதலினாலே
சொல்லரும்ப வைத்ததிருப் பெயரிசைபாடும்

செம்மையுறு மண்வளத்தின் அருமையே பாடும்
செய்பயிர்கள் யாவையுமே நல்லிசை பாடும்
உய்யவழி காட்டுமுயர் வெற்றிலைக் கொடிகள்
உதயன்முகம் காணவென்றே உயர்ந்துடனோடும்

பண்பிலுயர் தமிழ் வளர்த்த செந்தமிழ்ப் புலவர்
வித்துவ சிரோண்மணி பொன்னம்பலமும்
கண்ணெனவே காத்ததமிழ் கவிதைகள்பாடும்
கண்ணான எங்களூரின் பெருமைபண்பாடும்

மாமுகத்தாள் மாருதப்புர வீகவல்லியும்
மாறாத தன் முகத்தின் வடுக்கள் கண்டுமே
நாமும் தினம் தொழுதெழவே வைத்தவைங்கரன்
வீரகத்தின் விநாயகரின் பெருமையே பாடும்

ஊர் வாழ ஊரொளிர வேண்டும் கல்வியே
உற்ற துயர் தீர்க்கும் நல்ல மருந்தெனக்கண்டே
கூர்மைமிகு அறிவொளிர வைத்த கலையகம்
குஞ்சரநல் முகத்தழகன் முன்னிசை பாடும்

முன்னவர்கள் செய்தர்மம் தனைநிதம் பாடும்
முத்தான கேணியவன் தீர்த்தமென்றாகும்
இன்னுமதன் முன்னிருக்கும் ஆவுரிஞ்சிக்கல்
இசை பாடும் எங்களூரின் மேன்மையேடும்

ஆவினங்கள் நீரருந்த அமைந்த தொட்டிகள்
அரணெனவே திகழும்மதி லுடனிசைபாடும்
நாவினிக்கப் பாடுமூரின் மேன்மையைப்பாடும்
நவிலும் பல சான்றுகளும் உடனிசைபாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வராம் முதலியா பிள்ளையும் செய்த
முத்தான நல்மடமும் தன்னிசை பாடும்
இன்னுமதன் பெருமைமிகு இலங்கிடச் செய்யும்
இப்பெருமை பாடும் கொல்லங்கலட்டியெம்மூராம்

காரிகையர் கற்பினுக்கே ஒப்பெனச் சொல்லும்
கவின் மிகுந்த முள்முருகம் மரமிசை பாடும்
கூரிய முள் கைப்படாத குணத்தினைச்சொல்லும்
குளிர்ந்த வெற்றிலைக்கொடிகள் அதில்படர்ந்தாடும்

ஆழிம்பே ரலையெழுந்த கோலத்தினாலே
அரியமுள் முருங்கையதும் தன்னிலை கெட்டு
வாழிடமே இன்றியவை அழிந்த கோலமே
வரலாறு ஆனது தான் என்றுமே பாடுமே

இன்னுமின்னும் எழில் பாடும் எங்களூரிலே
இனிதுவக்கும் மா பலா வாழைப்பப்பாசி
நன்று வளர்ந்தோங்கும் தென்னைகமுகிசைபாடும்
நல்லூராம் எம்மூரின் பெருமைபண்பாடும்.

**கவிதையாக்கம்.**
**சு. குகதேவன், கொல்லங்கலட்டி**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# Summer BBQ & Get together 2016











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kulendran
Immigration
Law
Chambers

KILC

## Winner of 2016 Global Excellence Awards

## "Best Immigration Law firm London"

## "For all your immigration needs"

OISC

90 High Street, Colliers Wood, London SW19 2BT
Tel: 020 8542 8222 Mobile: 0777691 85592 Fax: 020 8542 8666
E-mail: kilc_work@yahoo.com web: www.vkimmigration.com
OISC Registration No: F200100055

"PREVIOUSLY KNOWS AS INTERNATIONAL REFUGEES ORGANISATION"

# CARLTON LEISURE

*Worldwide Travel & Tours*

Appointed Agent for

SriLankan Airlines · Emirates · QATAR AIRWAYS · BRITISH AIRWAYS Specialist Partner · JET AIRWAYS · ETIHAD AIRWAYS · ROYAL JORDANIAN · OMAN AIR · KUWAIT AIRWAYS

## SPECIAL FLIGHT OFFERS TO

## COLOMBO, CHENNAI, CANADA

**Call us for special family discount**



இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில்
முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்

Hundreds of airlines and thousands
of destinations worldwide

www.carltonleisure.com

Book with confidence ATOL protected.

தமிழில் உரையாடி உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான
விலையில் விமானச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**020 8554 4200**
**020 8100 0000**

OPEN 7 DAYS

IATA · ATOL PROTECTED 4568

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KMO Get Together



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes
for
Kalaikkolunthu 2017

From
Well Wishers

---

Best wishes
for
Kalaikkolunthu 2017

From
Mr & Mrs Ramachandran
and
family

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்

எமது அழைப்பையேற்று வருகை தந்த பிரதம விருந்தினர் வைத்தியகலாநிதி நவரத்தினம் அவர்கள்

வாழ்த்துச் செய்தி அனுப்பிய சகோதர சங்கங்கள்

இம் மலருக்கு ஆக்கங்கள் வழங்கிய எம்மூர் மக்கள்

நடன நிகழ்சிகளை தயாரித்து அளித்த திருமதி அனுஷா சஜீவ்

மெல்லிசை விருந்தை வழங்கிய ராகாஸ் மெல்லிசைக் குழுவினர்

இம் மலர் வெளியிட உதவிக்கரம் நீட்டி விளம்பரங்கள் தந்த வர்த்தக ஸ்தாபனங்கள்

இம் மலரை அழகாக வடிவமைத்துத் தந்த Gradient Graphics ஸ்தாபனத்தார்

இம் மலரரை அச்சிட்டு உதவிய Prontaprint Wimbledon ஸ்தாபனத்தார்

சிறந்த உணவுதனை வழங்கிய சிந்து மஹால் நிறுவனத்தினர்

இவ் விழா சிறப்பாக நடைபெற தோளோடு தோள் நின்று உழைத்த எமது ஒன்றிய உறுப்பினர்கள், நலன் விரும்பிகள்

இவ் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த நீங்கள்

செயலாளர்
கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம், பிரித்தானியா


ஓம் சக்தி

வட இலண்டன்

திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

(Reg Chaity 1143043) 59-69 Church Lane,Edmonton,London N9 9PZ,United Kingdom.
PH:0208 884 3333 | Info@ambaal.org | www.ambaal.org

நூதன கருங்கல் ஆலய உத்தமோஉத்தமபட்ச 33 குண்டசகித ஸ்வர்ணபந்தன

மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் 04.06.2017

கர்மாரம்பம் – 27.05.2017 சனிக்கிழமை காலை 8.25
யாகாரம்பம் – 31.05.2017 புதன்கிழமை மாலை
ஆலயதிறப்பு விழா – 01.06.2017 வியாழக்கிழமை காலை 9.00
எண்ணெய்காப்பு – 01.06.2017 வியாழக்கிழமை மதியம் 2 மணி முதல்
03.06.2017 சனிக்கிழமை மாலை 5 மணி வரை
மஹாகும்பாபிஷேகம் – 04.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு
மண்டலாபிஷேகம் – 05.06.2017 முதல் 06.07.1017 வரை

THIRUVARULMIGU ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE

Maha kumbabishekam [Consecration ] - 04.06.2017

Consecration Rituals Starts - 27.05.2017 Saturday 8.25am
Consecration Yaagaha Starts - 31.05.2017 Wednesday Evening
Temple Oprn Ceremony - 01.06.2017 Thursday 9am
Ennaikappu[Oil Bath] - 01.06.2017 Thursday starts at 2pm to 03.06.2017 Saturday 5pm
Maha Kumbabishekam - 04.06.2017 Sunday 10am
Mandalapishekam - 05.06.2017 to 06.07.2017

அனைவரும் வருக அன்னையின் அருள் பெறுக

Hindu Tamil Cultural Association [Enfield]

Free Car Park &
Shuttle Bus Service Available

HTCA




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

FOCUSCiA
Be creative...

Wedding | Arangetram | Social Events | Concerts

YouTube

www.focuscia.co.uk | info@focuscia.co.uk

Contact Kiri - 0208 672 0855 | 07932277338

Midlands - 07976268041

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BA TRANSFER.com

*You're safe in our hands*

We cover all major UK airports

## Call : 0207 118 0110




## Why Book With Us?

- Fixed prices - No hidden charges
- No extra charge for baby/booster seats
- We monitor flight times
- 24/7 telephone support with friendly staff
- Free Journeys and Vehicle Upgrades for Members
- Executive Cars and Coaches

## Soon Launching: BA Travels

## CALL : 02071837371

London Private Hire Car Association
5 STAR AWARD WINNERS
2013 • 2012 • 2011 • 2010
2009 • 2008 • 2007 • 2006

BEST PRICE GUARANTEE BEST PRICE

LICENSED PRIVATE HIRE CAR ASSOCIATION • safe in our hands

TAXI PRIVATE HIRE

Licence No: 5508

We will give •Every £100 spent - We will give • Every £100 spent -
£2.50 to charity

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org